

மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியில் வெற்றி பெற்ற இரா.ஜெயராமகிருஷ்ணன் திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி தலைமையில் உடுமலை மேற்கு, மத்திய ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் தொகுதி மக்களைச் சந்தித்து நன்றி தெரிவித்தார். இதில் ஒன்றிய கழக செயலாளர்கள் தி.செழியன் (உடுமலை மேற்கு), க.செந்தில்குமார் (உடுமலை மத்தியம்), உள்பட மாநில, மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், பாக முகவர்கள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### 4-வது முறையாக என்மீது நம்பிக்கை வைத்து வெற்றி வாய்ப்பை வழங்கியுள்ளீர்கள்!

# குன்னம் பகுதிக்கு என்றும் நன்றிக்கடன் உள்ளவனாக, மக்கள் பணி செய்வேன்!

## முன்னாள் அமைச்சர் சா.சி.சிவசங்கர் எம்.எல்.ஏ. அறிக்கை!

பெரம்பலூர்,மே 29-

குன்னம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மேனாள் அமைச்சர், அரியலூர் மாவட்ட கழக செயலாளர் குன்னம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.சிவசங்கர் குன்னம் தொகுதி மக்களிடம் ஆண்டிமடம், குன்னம் தொகுதி வேட்பாளராக உங்களை நாடி வந்த எனக்கு, 4வது முறையாக என்மீது நம்பிக்கை வைத்து 'குன்னம்' பகுதி மக்கள், வெற்றி வாய்ப்பை வழங்கியுள்ளீர்கள்.

குன்னம் பகுதிக்கு என்றும் நன்றிக்கடன் உள்ளவனாக, மக்கள் பணி செய்வேன்.

மேலும் நான் இப்பகுதியில் அரசு அறிவியல்



கல்லூரி, அரசுப் பேருந்து பணிமனை, ஆரம்ப சுகாதார நிலையம், 110 KV தரம் உயர்த்தப்பட்ட துணை மின் நிலையம்,

தரமான சாலை வசதி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, புதிய பேருந்து வசதிகள் என குன்னம் மக்களுக்கு ஏற்படுத்தி தந்துள்ளேன்.

எதிர்க்கட்சியாக இருந்தாலும் மக்களுக்கான குரலாக சட்டமன்றத்தில் நான் உங்களின் குரலாக ஒலித்திடுவேன் என கூறினார்.

பின்னர் தமது தொகுதிக்கு உட்பட்ட குன்னம் ஒன்றியம் மேலுசேன்நகரம், வேம்பமரம், கீழஉசேன்நகரம், அல்லிநகரம், குறிஞ்சிப்பாடி, தொண்டப்பாடி, சடைக்கன்பட்டி, சீத்தா ராம்புரம், மங்கலம், கீழமாத்தூர், அழகிரிப்பாளையம், வரிசைப்பட்டி, தங்கநகரம், மேலமாத்தூர், இலந்தகுழி, சீராநத்தம், மதுராகுடிகாடு, ஆதனூர், கொட்டரை, குரும்ப பாளையம், சாத்தனூர், சா.குடிகாடு, தெற்குமாதவி, நத்தகுடிகாடு, சிறுகன்பூர், வரகுபாடி, மலையப்பநகர், சமத்துவபுரம், காரை, தெரணி, புதுக்குறிச்சி உள்ளிட்ட கிராமங்களில் வீதி வீதியாக சென்று வாக்களித்த வாக்காள பெருமக்களுக்கு நன்றி கூறினார், பொதுமக்கள், கழக நிர்வாகிகள் ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர்.

உடன் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் என்.கிருஷ்ணமூர்த்தி, தே.மு.தி.க. மாவட்ட செயலாளர் துரை சிவாஅய்யப்பன், வேப்பூர் தெற்கு கழக ஒன்றிய பொறுப்பாளர் சி.இராஜேந்திரன் தே.மு.தி.க. ஒன்றிய செயலாளர் செல்வராஜ், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன் மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

### புனித தோமையர்மலை வடக்கு ஒன்றியம், பொழிச்சலூரில்

# புரட்சிபாரதம் கட்சியில் இருந்து 50 பேர் விலகல்!

## தா.மோ.அன்பரசன் முன்னிலையில் கழகத்தினர் இணைந்தனர்!

சென்னை, மே.29-

புனித தோமையர்மலை வடக்கு ஒன்றியம், பொழிச்சலூரில் புரட்சிபாரதம் கட்சியில் இருந்துபொழிச்சலூர் ஆசிம் தலைமையில் 50 பேர் கூண்டோடு விலகி தா.மோ.அன்பரசன் முன்னிலையில் கழகத்தினர் இணைந்தனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி புனித தோமையர்மலை வடக்கு ஒன்றியம், பொழிச்சலூர் ஊராட்சியில் உள்ள புரட்சி பாரதம் கட்சியை சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர்கள் 50 பேர் அக்கட்சியில் இருந்து விலகி ஆட்டு தொட்டி ஆட்டோ ஓட்டுநர் சங்கத் தலைவர் ஆர்.ஏ. ஆசிம் தலைமையில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.

பொழிச்சலூர் ஊராட்சியை சேர்ந்த எஸ்.அசோக், பி.சந்திரசேகர். டி.ஸ்ரீதர், என்.பரமன் உள்ளிட்ட 10 பேரும், ஆட்டு தொட்டி ஆட்டோ சங்கத்தை சேர்ந்த டி.வெங்கடேசன், ஏ.இதயாதுல்லா உள்ளிட்ட 10 பேரும், பல்லாவரம் மக்ஸ் ஆட்டோ சங்கத்தை சேர்ந்த எஸ்.தண்டபாணி, பி.பால்ராஜ், எஸ்.ஜாகீர்உசேன், அய்யனார், ரத்தினம் உள்ளிட்ட 10 பேரும்,

பம்மல் முத்தமிழ் நகர் ஆட்டோ சங்கத்தைச் சேர்ந்த எஸ்.விஜயகுமார், ராம்நாத், அப்துல் ரஷீத் உள்ளிட்ட 10 பேரும், பொழிச்சலூர் மூவர் நகர் ஆட்டோ சங்கத்தை சேர்ந்த எம்.சக்தி, ஆர்.பாலாஜி, ஸ்ரீதர் மற்றும் பொழிச்சலூர் விமான் நகரை சேர்ந்த வனராஜா, சுரேஷ், தனபால், சரவண குமார் உள்ளிட்ட 50 பேரும் புரட்சி பாரதம் கட்சியில் இருந்து விலகி தா.மோ.அன்பரசன் முன்னிலையில் தி.மு. கழகத்தில் இணைந்தனர்.

மாவட்ட கழக துணைச் செயலாளர் இ.கருணாநிதி, தொ.மு.ச. செயலாளர் இரா.பொன்னுராம், புனித தோமையர்மலை வடக்கு ஒன்றியச் செயலாளர் ஜி.கே. ரவி, மாவ ட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், ஒன்றிய துணைச் செயலாளர் செல்வராஜ், பொழிச்சலூர் ஊரா ட்சி மன்றத் தலைவர் வனஜா தயாளன், துணைத் தலைவர் ஜோசப், ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் அன்பு பிரபாகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### கவிஞர் தமிழ்தாசன் தலைமையில்

# கழக தீர்மானக் குழு நிர்வாகிகள் கூட்டம்!

## ஆர்.எஸ்,பாரதி – டி.கே.எஸ்.இளங்கோவன் சிறப்புரை! தீர்மானக்குழுச் செயலாளர்கள் அறிவிப்பு!

சென்னை, மே 29-

கழக தீர்மானக் குழு செயலாளர்கள் மீ.அ.வைத்தியலிங்கம், அக்ரி கே.பி.டி. கணேசன். கோவை நா. கார்த்திக் ஆகியோர் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:

கழக தலைமை தீர்மானக் குழு நிர்வாகிகள் கூட்டம் வரும் 31.5.2026 ஞாயிற்றுக் கிழமை காலை 11 மணியளவில் சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்க வளாகத்தில் தீர்மானக் குழு தலைவர் கவிஞர் தமிழ்தாசன் தலைமையில், தீர்மானக் குழு செயலாளர்கள் மீ.அ. வைத்தியலிங்கம், அக்ரி கே.பி.டி.கணேசன், கோவை நா.கார்த்திக் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர்ஆர். எஸ்.பாரதி மற்றும் கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் சிறப்புரையாற்ற உள்ளனர்.

கூட்டத்தில் மாநில தீர்மானக் குழு நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

பொருள்:

1.முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா

2.கழக ஆக்க பணிகள்

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின்

# மாநில நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம்!

## செயலாளர் – டாக்டர். அ.சுபேர்கான் அறிவிப்பு!

சென்னை,மே.29-

சிறுபான்மையின மக்களின் பாதுகாவலர் கழகத்தலைவர் அவர்களின் நல் வழிகாட்டுதலின்படியும், கழக இளைஞரணிச் செயலாளர் அவர்களின் ஆலோசனையின்படியும் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நாளை (30-05-2026-சனிக்கிழமை) காலை 10:00 மணியளவில் அண்ணா அறிவாலயம் - கலைஞர் அரங்கில் நடைபெறவுள்ளது.

எனவே இக்கூட்டத்தில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 1.ஜூன்-3 முத்தமிழறிஞர், தலைவர் கலைஞர் பிறந்தநாள் விழா

2. கழக ஆக்கப்பணிகள் தொடர்பாக.

இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மேல்மருவத்தூரில்

# பாழடைந்து வரும் தமிழ்நாடு ஓட்டல்!

மதுராந்தகம், மே 29-

மேல்மருவத்தூரில் ஒரு ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்ட தமிழ்நாடு ஓட்டல் பாழடைந்து வரும் நிலையில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் புதிதாக வணிக வளாகத்துடன் ஓட்டல் கட்டிடம் கட்டி தர வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது. செங்கல்பட்டு மாவட்டம் மேல்மருவத்தூரில் சென்னை -திருச்சி தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி ஒரு ஏக்கர் பரப்பளவில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் உள்ளது. ஒரு வரவேற்பு அறை, நான்கு தங்கும் அறை, ஒரு உணவகம் உள்ளிட்ட இரண்டு கட்டிடங்களுடன் கடந்த 1992ம் ஆண்டு இந்த கட்டிடம் திறக்கப்பட்டது. அன்றிலிருந்து தமிழ்நாடு ஓட்டல் என்ற பெயரில் நன்றாக செயல்பட்டு வந்தது.

இதில், காலப்போக்கில் இந்த ஓட்டலை லீசுக்கு எடுத்தவர்கள் முறையாக நடத்தவில்லை என்று கூறப்படுகிறது. இதன் காரணமாக கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பாக இந்த ஓட்டல் மூடப்பட்டது. இதனை தொடர்ந்து இந்த ஓட்டல் மூடியே கிடக்கிறது. மேலும் இந்த ஓட்டலுக்கான மின் கட்டணம் கட்டாமல் மின்சாரமும் துண்டிக்கப்ப ட்டுள்ளது. மேல்மருவத்தூர் ஊராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்து வரியும் செலுத்தப்படாமல் உள்ளது. தற்போது இந்த ஓட்டல் கட்டிடம் பகுதி பொதுமக்களின் சிறுநீர் கழிக்கும் பகுதியாக மாறியுள்ளது.


'வாட்ஸ் அப்'பில் வலம் வருகிறது!






### திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினர்

# அலுவலகத்தில் TVK கட்சி வண்ணத்தில் பெயிண்ட்:

## பொதுமக்கள் மத்தியில் சலசலப்பு!




திருச்சி, மே 29-

திருவெறும்பூர் தொகுதி அரசு சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்குத் தமிழக வெற்றிக் கழகத்தின் (TVK) கட்சித் கொடி நிறம் போன்ற வர்ணம் பூசப்பட்டிருப்பது தற்போது பெரும் சர்ச்சையையும், தொகுதி மக்களிடையே சலசலப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

திருவெறும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருப்பவர் நவல்பட்டு விஜி. இவர் இதற்கு முன்பு, "அரியமங்கலம் பகுதியில் உள்ள குப்பைகளை ஆயிரம் அடி பள்ளத்தில் கொட்டலாம்" என்று கூறி சமூக வலைதளங்களில் 'வில்லேஜ் விஞ்ஞானி' என்ற விமர்சனத்திற்கும், கேலிக்கும் உள்ளானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், மக்கள் பயன்பாட்டிற்கான அரசு சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை, ஒரு குறிப்பிட்ட கட்சியின் அலுவலகம் போல மாற்றி, அதற்கு TVK கட்சியின் கொடி வண்ணத்தைத் தீட்டியுள்ளார். அரசு அலுவலகத்தைப் பொதுவானதாக நடத்தாமல், கட்சி அலுவலகம் போல மாற்றிய சட்டமன்ற உறுப்பினரின் இந்தச் செயல் திருவெறும்பூர் பகுதி பொதுமக்களிடையே கடும் அதிருப்தியையும் விவாதத்தையும் ஏற்படுத்தியுள்ளது.



கோவை மாநகர் மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு துணை தலைவர் ஜார்ஜ் மகன் சாலை விபத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதை அறிந்து கோவை மாநகர் மாவட்ட பொறுப்பாளர் துரை. செந்தமிழ் செல்வன் நேரில் சென்று நலம் விசாரித்தார். உடன் மாநகர் மாவட்ட துணை செயலாளர் கோட்டை அப்பாஸ், பொதுக்குழு உறுப்பினர் ச.கார்த்திகேயன் ஆகியோர் உள்ளனர்.



திருப்பூர் தெற்கு மாவட்டம், மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதி, மடத்துக்குளம் பேரூராட்சி கிருஷ்ணாபுரம் பகுதியில் மஞ்சள் காமாலை நோய் தாக்குதலில் ஏழு பேர் பாதிக்கப்பட்ட நிலையில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் கே. ஈஸ்வரசாமி, மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட பொறுப்பு குழு உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன், மடத்துக்குளம் பேரூராட்சி தலைவர் கலைவாணி பாலமுரளி ஆகியோர் கிருஷ்ணாபுரம் பகுதிக்கு நேரில் சென்று மேலும் மஞ்சள் காமாலை நோய் பரவாமல் பொதுமக்களை பாதுகாக்கும் வகையில் மருத்துவர்கள் குழுவை சம்பவ இடத்திற்கு அனுப்பி வைத்து நேரில் ஆய்வு செய்தனர். இதில் பேரூர் கழகச் செயலாளர் பாலமுரளி உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.